முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு.ஜெ. ஆன்ஸ் ராஜா, பி.ஏ., பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, வள்ளியூர்

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை

<u>அசல் வழக்கு எண். 31 / 2024</u>

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆ.திருமலாபுரம் கிராமம், ஆ.திருமலாபுரம் ஊரில் கிழக்குத்தெருவில், கதவு எண்.1/14/1 என்ற நம்பர் வீட்டில் வசிக்கும் முத்தையா அவர்கள் குமாரர், வயது 35 உள்ள M.பார்த்திபன் ... வாதி

//எதிர்//

1) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆ.திருமலாபுரம் கிராமம், ஆ.திருமலாபுரம் ஊரில் கிழக்குத்தெருவில், கதவு எண்.1/69 என்ற நம்பர் வீட்டில் வசிக்கும் ராம்சுந்தர் அவர்கள் மனைவி, வயது 37 உள்ள R.சகுந்தலா

2) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தெற்கு கள்ளிகுளம் கிராமம், தெற்கு கள்ளிகுளம், புனித மிக்கேல் தெருவில், கதவு எண்.230/8 என்ற முகவரியில் வசித்து வரும் ஜேசு மிக்கேல் அவர்கள் குமாரர், வயது 52 உள்ள J.அந்தோணி மைக்கேல் ராஜா

3) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தெற்கு கள்ளிகுளம் கிராமம், தெற்கு கள்ளிகுளம், புனித மிக்கேல் தெருவில், கதவு எண்.230/8 என்ற முகவரியில் வசித்து வரும் J.அந்தோணி மைக்கேல் ராஜா அவர்கள் குமாரர், வயது 37 உள்ள J.மைக்கேல் எல்டன்

4) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரி ஊரில், லூர்து தெரு, கதவு எண். 159/5 என்ற முகவரியில் வசித்து வரும் சேசு அவர்கள் குமாரர், வயது 53 உள்ள டன்ஸ்டன் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 1 மற்றும் 2 ன் கீழ்

அ) பிராது 1-ம் தபசில் சொத்திற்கு சென்றுவர 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 2-ம் தபசில் சொத்தின் வழியாக வழி வசதியுரிமை உண்டு என விளம்புகை செய்து, அதற்கு பின்னீட்டாக வாதி 2-ம் தபசில் சொத்து வழியாக 1-ம் தபசில் சொத்திற்கு சென்று வருவதை 1-ம் பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவரேனும் எந்த வகையிலும் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கும்படியும்,

ஆ)வழக்கு செலவுத் தொகை வாதிக்கு கிடைக்கும் படிக்கும்,

இ)மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | - | 27.03.2024 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | - | 27.03.2024 |

வழக்கு மூலம் - 24.10.2019, 04.07.2020, 25.03.2024 ஆ.திருமலாபுரம் கிராமத்தில் வைத்து உற்பத்தி.

வழக்கு பரிகாரத்தை தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் அ) பரிகாரத்திற்காக பிரிவு 25(b)-ன் கீழ் ரூ.68,544/- ஆக மதித்து அதற்கு ரூ.2057/- நீதிமன்ற முத்திரை கட்டணங்களாக செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 29.04.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சகாதேவன் ஐயர்,B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுபாஷ்,M.Sc.B.L., அவர்கள் ஆஜராகியும், வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்த நிலையில், வாதியின் வருகையின்மையின் காரணமாகவும், வழக்கினை நடத்த வாதி முன்வராத நிலையிலும், இன்று இந்நீதிமன்றம் கட்டளையிட்டு பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்பாணை</u>**

1) வாதியின் வருகை தவறுகையின் காரணமாக வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது.

2) செலவுத் தொகை குறித்து உத்தரவு இல்லை.

<u>செலவு விபரப்பட்டியல்</u>

(இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>தபசில் சொத்து விவரம்</u>**

**<u>1ம் தபசில்</u>**

திருநெல்வேலி பதிவு மாவட்டம், வள்ளியூர் சார்பதிவாளர் சரகம், இராதாபுரம் வட்டம், ஆலங்கிணறு திருமலாபுரம் கிராமம், அயன் புஞ்சை சர்வே 110/5E நம்பர் ஹெக்டேர் 0.24.00-க்கு சமமான செண்ட் 59 உள்ள நிலத்தில் கிழக்கடைய ஹெக்டேர் 0.11.00-க்கு சமமான செண்ட் 27-ல் வடக்கடைய மேற்கடைய கிழமேலாக ஹெக்டேர் 0.01.77-க்கு சமமான செண்ட் 4.37-க்கு சமமான சதுர மீட்டர்

177 அளவுள்ள காலிமனை பூராவும், அதில் அமைந்துள்ள கதவு எண்.1/14/1 கொண்ட வீடும்.

**எல்கை**

| | | |
|---|---|---|
| வடக்கு | - | சுப்பன், நயினார் வகையறாவுக்கு பாத்தியப்பட்ட சர்வே 110/5 ஏ, 110/5 சி, 110/5 டி நம்பர் நிலங்கள். |
| கிழக்கு | - | நான் நாளது தேதியில் ஏ. விஜிந்துக்கு கிரையம் கொடுக்கும் காலிமனை |
| தெற்கு | - | என் கையிருப்பு நிலம் |
| மேற்கு | - | சர்வே 110/5E நம்பரில் மேற்கடைய செண்ட் 32 உள்ள நிலம் |

**2ம் தபசில்**

ஷை கிராமத்தில் அமைந்துள்ள அ.பு.ச.110/5E-ல் அமைந்துள்ள 26 மீட்டர் நிலம் 5 மீட்டர் அகலம் கொண்ட பாதை. (26 மீட்டர் 5 மீட்டர் = 1344 சதுர அடி)

**எல்கை**

| | | |
|---|---|---|
| வடக்கு | - | சைமன் பீட்டர் வீடு |
| தெற்கு | - | 1ம் பிரதிவாதி சகுந்தலா காலிமனை |
| மேற்கு | - | புல எண். 326/20 சர்க்கார் புறம்போக்கு |
| கிழக்கு | - | வாதி வீடு , இதற்குட்பட்டது. |

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒம்/- ஜெ. ஆன்ஸ் ராஜா

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மு.மா.உ.நீ. வள்ளியூர்

அ.வ.எண். 31/ 2024

தீர்ப்பாணை

நாள் 29.04.2026